# குறள் தேனீ (நிலை-1) - பேரவை விழா - 2020, அட்லாண்டா

| வரிசை எண் | குறள் எண் | அதிகாரம் | குறள் | பேரா.பாப்பையா உரை |
|---|---|---|---|---|
| 1 | 20 | வான்சிறப்பு | நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு. | எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது; அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது. |
| 2 | 26 | நீத்தார் பெருமை | செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார். | பிறர் செய்வதற்கு முடியாத செயல்களைச் செய்பவரே மேன்மக்கள்; செய்ய முடியாதவரோ சிறியவரே. |
| 3 | 35 | அறன்வலியுறுத்தல் | அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம். | பிறர் மேன்மை கண்டு பொறாமை, புலன்கள் போகும் வழிச் செல்லும் ஆசை, இவை தடைபடும் போது வரும் கோபம், கோபத்தில் பிறக்கும் தீய சொல் எனும் இந்நான்கையும் விலக்கித் தொடர்ந்து செய்யப்படுவது அறம். |
| 4 | 66 | மக்கட்பேறு | குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர் | பெற்ற பிள்ளைகள் பேசும் பொருளற்ற மழலைச் சொல்லைக் கேட்காதவர்தாம், குழலும் யாழும் கேட்க இனியவை என்பர். |
| 5 | 67 | மக்கட்பேறு | தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் | தகப்பன் தன் பிள்ளைக்குச் செய்யும் நன்மை, கற்றவர் அவையில் முதன்மைப் பெறச் செய்வதே. |
| 6 | 69 | மக்கட்பேறு | ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய். | தம் மகனைக் கல்வி ஒழுக்கங்களால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் கூற அதைக் கேட்ட தாய், அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் மிகுதியாக மகிழ்வாள். |
| 7 | 70 | மக்கட்பேறு | மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல்எனும் சொல் | தன்னைக் கல்வி அறிவு உடையவனாய் ஆளாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறு, பிள்ளையின் ஒழுக்கத்தையும் அறிவையும் கண்டவர், இப்பிள்ளையைப் பெறுவதற்கு இவன் தகப்பன் என்ன தவம் செய்தானோ என்று சொல்லும் சொல்லைப் பெற்றுத் தருவதே. |
| 8 | 72 | அன்புடைமை | அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. | அன்பு இல்லாதவர் எல்லாவற்றாலும் தமக்கே உரிமை உடையவராய் இருப்பர். அன்புள்ளவரோ பொருளால் மட்டும் அன்று; உடம்பாலும் பிறர்க்கு உரியவராய் இருப்பர். |
| 9 | 80 | அன்புடைமை | அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு. | அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 100 | இனியவைகூறல் | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. | மனத்திற்கு இன்பம் தரும் சொற்கள் இருக்க, அவற்றை விட்டுவிட்டுத் துன்பம் தரும் சொற்களைக் கூறுவது, நல்ல பழம் இருக்க நச்சுக்காயை உண்பது போலாகும். |
| 11 | 102 | செய்ந்நன்றி அறிதல் | காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்<br>ஞாலத்தின் மாணப் பெரிது. | நமக்கு நெருக்கடியான நேரத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியது என்றாலும், உதவிய நேரத்தை எண்ண அது இந்தப் பூமியை விட மிகப் பெரியதாகும் |
| 12 | 103 | செய்ந்நன்றி அறிதல் | பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்<br>நன்மை கடலின் பெரிது. | இவருக்கு உதவினால் பிறகு நமக்கு இது கிடைக்கும் என்று எண்ணாதவராய் ஒருவர் செய்த உதவியின் அன்பைஆய்ந்து பார்த்தால், அவ்வுதவியின் நன்மை கடலைவிடப் பெரியது ஆகும். |
| 13 | 110 | செய்ந்நன்றி அறிதல் | எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை<br>செய்ந்நன்றி கொன்ற மகற்கு. | எத்தனை பெரிய அறங்களை அழித்தவர்க்கும் பாவத்தைக் கழுவ வழிகள் உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்து தீமை செய்பவனுக்கு வழியே இல்லை. |
| 14 | 127 | அடக்கமுடைமை | யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. | எதைக் காக்க முடியாதவரானாலும் நா ஒன்றையாவது காத்துக் கொள்ள வேண்டும். முடியாது போனால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர். |
| 15 | 129 | அடக்கமுடைமை | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினாற் சுட்ட வடு | ஒருவனை மற்றொருவன் தீயால் சுட்ட புண் உடம்பின்மேல் வடுவாக இருந்தாலும் உள்ளத்துக் காயம் காலத்தில்ஆறிப்போய்விடும். ஆனால் கொடிய வார்த்தைகளால் நெஞ்சைச் சுட்ட வடு அதில் புண்ணாகவே கிடந்து ஒருநாளும் ஆறாது. |
| 16 | 137 | ஒழுக்கமுடைமை | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்<br>எய்துவர் எய்தாப் பழி. | ஒழுக்கத்தினால் உயர்வை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் வேண்டாத பழியை அடைவர். |
| 17 | 138 | ஒழுக்கமுடைமை | நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்<br>என்றும் இடும்பை தரும். | நல்லொழுக்கம், அறமாகிய நன்மைக்கு வித்தாக அமைந்து இம்மை மறுமையிலும் இன்பம் தரும்; தீயொழுக்கமோ துன்பமே தரும். |
| 18 | 151 | பொறையுடைமை | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை<br>இகழ்வார்ப் பொறுத்தல் தலை. | தன்னையே தோண்டினாலும் தோண்டுபவர் விழுந்துவிடாதபடி தாங்கும் நிலம் போலத், தன்னை வார்த்தைகளால் அவமதிப்பவரையும் மதித்துப் பொறுப்பது முதன்மை அறம் |
| 19 | 293 | வாய்மை | தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்<br>தன்நெஞ்சே தன்னைச் சுடும். | பொய் என்று உள்ளம் உணர்த்துவதைச் சொல்ல வேண்டா. சொன்னால், அதைப் பொய் என்று உலகு அறியநேரும்போது தன் மனமே தன்னைச் சுடும். |
| 20 | 391 | கல்வி | கற்க கசடறக் கற்பவை கற்றபின்<br>நிற்க அதற்குத் தக. | கற்கத் தகும் நூல்களைப் பிழை இல்லாமல் கற்க; கற்ற பிறகு கற்ற கல்விக்கு ஏற்ப நல்ல வழிகளில் வாழ்க. |
| 21 | 423 | அறிவுடைமை | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு | எந்தக் கருத்தை எவர் சொன்னாலும், அக்கருத்தின் உண்மையைக் காண்பது அறிவு. |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | 428 | அறிவுடைமை | அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில். | பயப்பட வேண்டியதற்குப் பயப்படாமல் இருப்பது மூடத்தனம்; பயப்படுவது அறிவாளிகளின் செயல். |
| 23 | 647 | சொல்வன்மை | சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது. | தான் எண்ணியதைப் பிறர் ஏற்கச் சொல்லும் ஆற்றல் உள்ளவன், சொல்லும் செய்தி கடினமானது என்றாலும் சோர்வு இல்லாதவன், கேட்பவர் பகையாளர் என்றாலும் அஞ்சாதவன் இவன்மீது பகைகொண்டு வெல்வது எவர்க்கும் கடினமே. |
| 24 | 786 | நட்பு | முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு. | பார்க்கும்போது மனம் மகிழாமல், முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அன்று. அன்பால் மனமும் மலரப்பழகுவதே நட்பு. |
| 25 | 972 | பெருமை | பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான். | எல்லா மக்களும் பிறப்பால் சமமே; அவரவர் செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும். |